



Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tiruchirappalli
Date:2025.04.08 15:28:39

ரா.ஹரிஹரன்
வரைவாளர் நிலை-3

ரா.ராஜாமான்சிங்
மேற்பார்வையாளர்/வ.நி-II

<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்</u>

<u>திருச்சிராப்பள்ளி மாவட்டம்</u>

# திருச்சிராப்பள்ளி மாவட்டம் - துறையூர் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - கண்ணனூர் ஊராட்சி - வடக்குவெளி கிராமம், சர்வே எண்கள்: **445/3A1** -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாப் பகுதி)

அளவு : 1:400

இணையதள விண்ணப்ப எண் : PSDG2SF1/35740 /2024

வ

<u>குறிப்பு:</u>

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 1.00 ஏக்கர் (4050.00 ச.மீ) |
| சாலை, மூலை முடக்கு பரப்பு நீங்கலாக மனைப்பிரிவின் பரப்பு | : 2761.22 ச.மீ |
| மனைப்பிரிவின் எல்லை | |
| நிலையில் உள்ள சாலை | |
| கோரிய மனைகள் | : 18 |
| ஒதுக்கிய மனைகள் | : 18 |

<u>பொது ஒதுக்கீடு (உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டவை ஆவண எண்.9620/2024 நாள்.15.11.2024)</u>

| | |
|---|---|
| மனைப்பிரிவு உத்தேச சாலைகள் (ம) மூலை முடக்குகள் | : 1288.78 ச.மீ |
| உள்ளாட்சி உபயோகம் | : 37.06 ச.மீ (1.34%) |
| மின்வாரிய உபயோகம் (TANGEDCO) | : 51.18 ச.மீ (1.85%) |

<u>கட்டிட பக்க திறவிட வரம்பு</u>

அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழக்கல் துறை, நாள் 04.02.2019 (TNCDER -2019)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டிட பக்க திறவிடம் விடப்பட வேண்டும்.

<u>மூலை முடக்கு:</u>

சாலையின் அகலம் 12.0மீ. வரை 1.50மீ x 1.50மீ மற்றும் சாலையின் அகலம் 12.0மீ. மேல் 30.50மீ. வரை 3.00மீ x 3.00மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

## <u>நிபந்தனைகள்:</u>

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 71 ஊ.வ. (ம) உ. துறை நாள்: 16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்று மற்றும் அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பணை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) அரசாணை எண்:79.வீ.வ(ம)ந.வ.துறை,நாள்: 4.5.2017-ன் படி இந்த உத்தேச மனைப்பிரிவிற்க்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலைப்பயன் மாற்ற கட்டணமாக 1899-ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம்(மத்திய சட்டம்2/1899)உட்கூறு AA பிரிவு 47 -ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணாயம் செய்து, அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து,செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.

9) உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

10)பாசன வாய்க்கல்,கால்வாய்க்கல் மற்றும் இயற்கை வடிகால் ஆகியவை தடைபடாமல் எவ்வித ஆக்கிரமிப்புமின்றியும் வெள்ளப்பெருக்கத்தினால் அருகிலுள்ள பகுதிகள் பாதிக்கப்படாமலும் இம்மனைப்பிரிவு அமைக்கப்பட வேண்டும்.

11) அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம்(ம)குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019-ன் படிவங்களின் அடிப்படையிலும், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), துறையூர் ஊராட்சி ஒன்றியம், அவர்களின் அணுகு சாலைக்கான சான்று எண்.ந.க.எண்.4150/2024/தி7 நாள்:28.10.2024-ன் அடிப்படையிலும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்காண் ஆவணங்களின் தன்மை மாறுபாடாக அமையுமாயின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்.

<u>குறிப்பு:</u>
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.வ/ந.ஊ.இ.இ.(தி.மா)எண்:72/2025
(இணையதள ஒப்புதல்)

(இ-சைன் செய்யப்படுகிறது)
இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.